செ.வெ.எண்.356 /2009/செமதொஅ நாள்:22.10.2009

**<u>காஞ்சிபுரம் மாவட்ட உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.</u>**

சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் பெரும்பான்மையின சமூகத்தினருக்கு நிகராக சிறுபான்மையின சமூகத்தினரும் முன்னேற்றம் காண தமிழக அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், பிலால்கள், மோதினார்கள், இதரப் பணியாளர்கள் மற்றும் தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் ஆகியோரது வாழ்க்கைத் தரம் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் “உலமாக்கள் மற்றும் பணியாளர் நலவாரியம்” ஏற்படுத்தப்பட்டு, அதன் உறுப்பினர்களுக்கு விபத்தினால் அல்லது இயற்கை மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, ஊனம் ஏற்பட்டால் உதவித்தொகை, உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு படிக்க உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருசிதைவு/கருகலைப்பு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் 132 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.பாலசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.



செய்தி வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.